வினா எண் 450, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு கேட்கிறார். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

450–

ஆவின் நெய் டின்களில் இந்தி மொழியில் எழுதப்பட்டிருத்தல்.

*20374– திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு உணவுமற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் நெய் டின்களில் இந்தி புகுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எவ்வாறு அரசின் மொழிக் கொள்கைக்கு உகந்தது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் உற்பத்தி செய்யப்படும் நெய்யின் அளவில் 90 விழுக்காடு வட மாநிலங்களில் விற்பனையாவதால் அம்மாநிலங்களில் உள்ள இந்தி மட்டுமே அறிந்துள்ள நுகர்வோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஆவின் நெய் என்ற வார்த்தைகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் அந்த டின்னின் மேல் அச்சிடப்பட்டுள்ளன.

(ஆ) இது அரசின் மொழிக் கொள்கைக்கு எந்த வகைக் யிலும் முரணானது அல்ல.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் கூட்டுறவுத் துறை இணையத்தின் மூலமாக வெளி மாநிலங்களுக்கு அனுப்புவதாகவும், அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்காகவும் இந்த முறை கையாளப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இந்தி எழுத்துக்கள் எந்த ஆண்டிலிருந்து அந்த டின்களில் பதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும் அதனால் ஆவின் நெய் டின்கள் அதிக அளவில் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றதா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் நெய் மட்டுமல்ல, மற்றும் பல பொருட்கள் இங்கேயிருந்து சென்று வட மாநிலங்களில் விற்பனை ஆகின்றன. நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், யோகார்டு, வாசனை ஏற்றிய பால் போன்றவை வெளி மாநிலங்களில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாகவே இந்தி மொழியிலே 'ஆவின் கீ' என்ற வார்த்தைகள் எழுதப்பட்டு வருகின்றன. நம்முடைய அரசின் கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்த இரு மொழிக் கொள்கையிலிருந்து இம்மி அளவும் மாறாமல் தான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களே இந்தி ஆதிக்கத்தையும் இந்தி புகுத்துவதையும் தான் எதிர்த்தார்களே தவிர, இந்தி மொழியை எதிர்க்கவில்லை. ஆகவே, வியாபார நோக்கோடுதான் இது செய்யப்படுகின்றது. அண்ணா அவர்கள்கூட இந்தி, ஆட்சி மொழி ஆகக்கூடாது என்று சொன்னவர்கள், வியாபாரத்திற்கு வேண்டுமானால் பயன்படுத்தலாம் என்று அப்போதே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். ஆகவே, இது ஒரு குறிப்பிட்ட வியாபார நோக்கோடு மட்டும் பயன் படுத்தப்படுகின்றது. பல்லாண்டுக் காலமாகவே இது செய் யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசியர் க. பொன்னு சாமி.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வியாபாரத்திற்காக இந்தி என்று தொடர்ந்து, இது தவறான முன்மாதிரியாக ஆகிவிடாமல், வட மாநிலங்களில் இருப்பவர்கள் இந்தி மட்டுந்தான் தெரிந்தவர்கள் என்ற நிலை இருக்குமானால் அவர்களுக்கு விற்பனை செய்கிற ஆவின் நெய் டின்களுக்கு மட்டும் தனியாக இந்தியிலே எழுத்துக்களை அச்சடித்து அவர்களுக்கு அனுப்புகின்ற நடைமுறையை அரசு கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பரிசீலனை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி,

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும்,

டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஊட்டி ஊட்டிவளர்த்த தமிழ் உணர்வை அழிக்க நினைப்பவன் எவனானாலும் அழிவது உறுதி அழிவது உறுதி என்று இன்றைக்கு இரு மொழிக் கொள்கையை, நான் கடவுளாக ஏற்று வணங்கிக் கொண்டிருக்கின்ற ஒப்பற்றத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையில் வட மாநிலங்களுக்கு அனுப்புகின்ற டின்களில் தமிழிலும், ஆங்கிலத்திலும் அனுப்பினால் அங்கே உள்ளவர்கள் வியாபரத்திற்கு வேண்டுமானால் அதை இந்தியிலே எழுதிக் கொள்வதற்கு வழிமுறை செய்து வியாபாரத்தினை பெருக்குவதற்கு தாங்கள் ஆவன செய்வீர்களா என்று உங்கள் மூலமாக நான் பணிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செந்தமிழ்க்கே தீமை வந்தபின்பும் இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ'' என்று (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடி இருக்கின்றார்கள். ஆகவே, இந்தப் புரட்சித் தலைவியின் அரசு எப்பொழுதும் தமிழைக் காப்பதற்குப் பின் வாங்காது. அதே நேரத்தில், டின்களை இங்கேயிருந்து கொண்டுபோய், வட மாநிலங்களுக்குப் போனபிறகு அதன் மேலே பிரின்ட் செய்ய முடியாது என்பதை அருள்கூர்ந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. வி. கே. சின்னசாமி.

<u>திரு. வி. கே. சின்னசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பல்வேறு பொருட்களை நாம் வட மாநிலங்களுக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். ஆகவே, இந்தியிலே அதிலே எழுதுகிறோம். என்று சொன்னார்கள். நாம் வட மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு என்னென்ன பொருள்களை இறக்குமதி செய்கிறோம். அப்படி இறக்குமதி செய்கின்ற போது வட மாநிலத்தவர்கள், நாம் இந்தியிலே எழுதி அனுப்புவதைப்போல, அவர்கள் அங்கேயிருந்து தமிழிலே நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருகின்ற சரக்குகளை நாம் தெரிந்து கொள்வதற்கு உதவுகின்ற வகையில், தமிழிலே அவர்கள் பிரிண்டு செய்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்;</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நாம் பேசிக் கொண்டு இருப்பது ஆவின்' பொருள்களைப் பற்றி. இந்த ஆவின் பால்

993 ஏப்ரல் 23]

பொருட்கள் '90 சதவீதம் டெல்லி, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில்தான் அதிகமாக விற்பனை ஆகின்றன, குறிப்பாக நெய் விற்பனை ஆகின்றது. ஆகவேதான் இது வேறு மொழி அறியாத மக்களுக்குப் பயன்படவேண்டும், நம்முடைய நெய்யைப்போல யாரும் விற்று விடக்கூடாது என்ற காரணத்தினால் இதை நாம் செய்கின்றோம், இந்தத் துறையின் மூலமாக இதைப்போல வேறு எந்தப் பொருளையும் அங்கேயிருந்து டின்களிலே நாம் எதுவும் இறக்குமதி செய்வதில்லை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டிலே விற்பனையாகின்ற நெய் டின்களிலேயாவது இந்தி இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் துறையைப் பொறுத்த வரையில் அதைப் பார்த்துக் கொள்ளும், (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற துறைகளுக்கு நான் சொல்ல முடியாது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 451, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

451—

பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தல்

*11375—டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரமக்குடி தொகுதி, பாம்பூரில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பின் தகுதியின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் மேற்கண்ட கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது பற்றி அரசு பரிசீலிக்கும்,

டாக்டர் எஸ், சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பாம்பூரில் சாத்தியக் கூறுகள் இருப்பின்